Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
ST.C.No. 580 /2021

Deposition of witness for: PW - 3

| | | | |
|---|---|---|---|
| Name | : தீர்த்தக்கரை | Father/Husband Name | : ராஜேந்திரன் |
| Age | : | Calling | : |
| Date | : 09.03.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the 09 day of 03.2026.

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

**2 முதல் 4 எதிரிகள் ஆஜர், 1ம் எதிரி ஆஜர் இல்லை, மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

அரசுதரப்பில் முதல்விசாரணை

நான் தமிழ்நாடு சமூக நல விரிவாகக்க அலுவலராக பணியாற்றி 2019 ம் ஒய்வு பெற்று தற்போ நாமக்கல்லில் குடியிருந்து வருகிறேன். 2018ம் வருடம் நான் மேலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஊர் நல அலுவலராக பணியில் இருந்தபோது 05.04.2018ம் தேதி போன்மூலம் கிடைத்த தகவலை பெற்று மேலூர் ஒன்றிய சரகத்தை சேர்ந்த நரசிங்கம்பட்டி ராமராஜபுரத்தை சேர்ந்த முருகன் மகன் திவ்யா (வயது 17) சரவணன் என்பவருடம் குழந்தை திருமணம் 28.01.2018ம் தேதி நடந்ததாக கிடைத்த தகவலை பெற்று பூசாரிபட்டிக்கு சென்று விசாரித்தபோது பெறப்பட்ட தகவல் உண்மையென தெரிய வந்தது, எனவே இந்த திருமணம் பற்றி சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு மேலூர் அனைத்து மகளிர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் திருமதி.நிர்மலா என்பவரிடன் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான், அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **(அந்த**

**புகார் மனு அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது** ). போலீசார் வழக்கு பதிவு செய்து என்னை விசாரித்தார்கள்.

**எதிரி ஆஜர்**

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

குழந்தை திருமணம் குறித்து என்னிடம் நேரடியாக யாரும் புகார் கொடுத்தார்களா என்றால் இல்லை. போன் மூலமாக தகவல் கொடுத்த பெயர், முகவரி நான் கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. போனில் தகவல் கொடுத்தவரை நேரடியாக சந்தித்து, வாக்குமூலம் ஏதும் பதிவு செய்தேனா என்றால் இல்லை. ராமராஜபுரத்திற்கு சென்று அங்குள்ள ஊர் பெரியவர்களை விசாரித்து வாக்குமூலம் எதுவும் பதிவு செய்தேனா என்றால் இல்லை. இவ்வழக்கில் பாதிக்கப்பட்டதாக சொல்லப்படும் சிறுமி திவ்யா மற்றும் அவரது தாயாரை விசாரித்து வாக்குமூலம் எதுவும் பதிவு செய்தேனா என்றால் இல்லை. நான் சிறுமி திவ்யாவின் பிறப்பு சான்றிதழ் அல்லது வயது குறிக்கும் ஆவணங்கள் எதுவும் எனது புகாருடன் இணைத்து தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் போன்மூலமாக பெறப்பட்ட தகவலை பெற்று, சரிவர விசாரணை செய்யாமல் அவசர நிலையில் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.